# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஐந்தாம் பத்து

## ஒன்பதாம் திருமொழி - கையிலங்கு
## திருப்பேர்நகர்

** கை இலங்கு ஆழி சங்கன் * கருமுகில் திருநிறத்தன் *
பொய் இலன் மெய்யன் தன் தாள் * அடைவரேல் அடிமை ஆக்கும் **
செய் அலர் கமலம் ஓங்கு * செறி பொழில் தென்திருப்பேர் *
பை அரவணையான் நாமம் * பரவி நான் உய்ந்தவாறே! 1

வங்கம் ஆர் கடல்கள் ஏழும் * மலையும் வானகமும் மற்றும் *
அங்கண் மா ஞாலம் எல்லாம் * அமுது செய்து உமிழ்ந்த எந்தை **
திங்கள் மாமுகில் அணவு * செறி பொழில் தென்திருப்பேர் *
எங்கள் மால் இறைவன் நாமம் * ஏத்தி நான் உய்ந்தவாறே! 2

ஒருவனை உந்திப் பூ மேல் * ஓங்குவித்து ஆகம் தன்னால் *
ஒருவனைச் சாபம் நீக்கி * உம்பர் ஆள் என்று விட்டான் **
பெருவரை மதிள்கள் சூழ்ந்த * பெருநகர் அரவணை மேல் *
கருவரை வண்ணன் தென்பேர் * கருதி நான் உய்ந்தவாறே! 3

ஊன் அமர் தலை ஒன்று ஏந்தி * உலகெலாம் திரியும் ஈசன் *
ஈன் அமர் சாபம் நீக்காய் என்ன * ஒண் புனலை ஈந்தான் **
தேன் அமர் பொழில்கள் சூழ்ந்த * செறி வயல் தென்திருப்பேர் *
வானவர் தலைவன் நாமம் * வாழ்த்தி நான் உய்ந்தவாறே! 4

வக்கரன் வாய் முன் கீண்ட * மாயனே! என்று வானோர்
புக்கு * அரண் தந்து அருளாய் என்னப் * பொன் ஆகத்தானை **
நக்கரி உருவமாகி * நகம் கிளர்ந்து இடந்து உகந்த *
சக்கரச் செல்வன் தென்பேர்த் * தலைவன் தாள் அடைந்து உய்ந்தேனே 5

விலங்கலால் கடல் அடைத்து * விளங்கிழை பொருட்டு * வில்லால்
இலங்கை மாநகர்க்கு இறைவன் * இருபது புயம் துணித்தான் **
நலங்கொள் நான்மறை வல்லார்கள் * ஓத்தொலி ஏத்தக் கேட்டு *
மலங்கு பாய் வயல் திருப்பேர் * மருவி நான் வாழ்ந்தவாறே! 6

வெண்ணெய் தான் அமுது செய்ய * வெகுண்டு மத்தாய்ச்சி ஓச்சி *
கண்ணியர் குறுங்கயிற்றால் * கட்ட வெட்டென்று இருந்தான் **
திண்ண மாமதிள்கள் சூழ்ந்த * தென்திருப்பேருள் * வேலை
வண்ணனார் நாமம் நாளும் * வாய் மொழிந்து உய்ந்தவாறே! 7

அம்பொனார் உலகம் ஏழும் அறிய * ஆய்ப்பாடி தன்னுள் *
கொம்பனார் பின்னை கோலம் * கூடுதற்கு ஏறு கொன்றான் **
செம்பொனார் மதிள்கள் சூழ்ந்த * தென்திருப்பேருள் மேவும் *
எம்பிரான் நாமம் நாளும் * ஏத்தி நான் உய்ந்தவாறே! 8

நால் வகை வேதம் ஐந்து வேள்வி * ஆறங்கம் வல்லார் *
மேலை வானவரில் மிக்க * வேதியர் ஆதி காலம் **
சேல் உகள் வயல் திருப்பேர்ச் * செங்கண் மாலோடும் வாழ்வார் *
சீல மா தவத்தர் சிந்தை ஆளி * என் சிந்தையானே 9

** வண்டறை பொழில் திருப்பேர் * வரி அரவணையில் பள்ளி
கொண்டு * உறைகின்ற மாலைக் * கொடி மதிள் மாட மங்கை **
திண்திறல் தோள் கலியன் * செஞ்சொலால் மொழிந்த மாலை *
கொண்டிவை பாடி ஆடக் * கூடுவர் நீள் விசும்பே 10

**அடிவரவு:** கை வங்கம் ஒருவனை ஊன் வக்கரன் விலங்கலால் வெண்ணெய் அம்பொன் நால் வண்டறை தீதறு

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---